**ஆகஸ்ட் – 30**

# TNPSC துளிகள்

- அகமதாபாத்தில் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 49 கிலோ எடைப் பிரிவில் இந்தியப் பளு தூக்கும் வீராங்கனை மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றார்.
- மலேசிய நாடானது சீ லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து YTL குழுமத்தினால் மலேசியர்களுக்காக உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் உலகின் முதல் வங்கியான Ryt வங்கியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய-பசிபிக் பகுதியில் அதிகரித்து வரும் பதட்டங்களுக்கு மத்தியில் பிராந்தியப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக இந்தோனேசியா, அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகள் இணைந்து "சூப்பர் கருடா ஷீல்ட் 2025" எனும் வருடாந்திர இராணுவப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.

# தமிழ்நாடு செய்திகள்

## முதல்வர் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் - ஆகஸ்ட் 2025

- சென்னையில் நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தின் நீட்டிப்பை முதல்வர் M.K. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இது நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குப் பயனளிக்கும்.
- அரசாங்க வெளியீட்டின்படி, இந்தத் திட்டத்தின் விரிவாக்கம் நகரங்கள் மற்றும் நகரங்களில் உள்ள 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளை உள்ளடக்கியது என்பதோடு இதன் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 3.06 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.
- மொத்தமாக, இந்தத் திட்டம் இப்போது 34,987 பள்ளிகளில் 17.53 லட்சம் குழந்தைகளைச் சென்றடைகிறது.
- இந்தத் திட்டத்தின் மூலம் 20 லட்சம் மாணவர்கள் சத்தான உணவைப் பெறுவார்கள் என்றும், இந்த முயற்சிக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.600 கோடி ஒதுக்கப்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் கூறினார்.
- இந்த நிகழ்வில் பேசிய பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், இந்தத் திட்டத்தின் விரிவாக்கத்திற்காக தனது தமிழக முதல்வர் மீது பாராட்டு தெரிவித்தார்.
- பஞ்சாப் மாநிலம் உணவு உபரி மாநிலமாக இருப்பதால், இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக தனது அமைச்சரவை சகாக்களுடன் இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பேன் என்று மான் கூறினார்.
- முதல்வர் ஸ்டாலின், மே 6, 2022 அன்று சட்டமன்றத்தில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச காலை உணவுத் திட்டம் அறிமுகப் படுத்தப் படும் என்று அறிவித்தார்.
- இந்த முயற்சியின் முதல் கட்டம் செப்டம்பர் 15, 2022 அன்று மதுரையில் தொடங்கப் பட்டது.
- இதுவரை, மாநிலம் முழுவதும் அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகளிலும், கிராமப் புறங்களில் மட்டுமே அமைந்துள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இந்தத் திட்டம் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.
- அந்த ஆண்டு (2023) ஆகஸ்ட் மாதம், இது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இந்தத் திட்டம் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் சேர்த்து விரிவுபடுத்தப் பட்டது.
- சமீபத்திய விரிவாக்கத்துடன், நகர்ப்புறங்களுக்கான அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள மாணவர்களும் இதனால் பயன் பெறுவார்கள்.
- இந்த விரிவாக்கம் இத்திட்டத்தின் செயல்படுத்தலின் 5வது கட்டத்தைக் குறிக்கிறது.
- இது வருகை அதிகரிப்பு, மேம்பட்ட கவனம் செலுத்தும் நேரம் மற்றும் தொடக்கப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளில் நோயுற்ற விகிதங்களைக் குறைத்தல் போன்ற நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.
- இது டிசம்பர் 2023 மற்றும் டிசம்பர் 2024 ஆகிய காலக் கட்டத்திற்கு இடையில், அரசுப் பள்ளிகளில் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளிடையே மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவது 63.2% குறைவதற்கும், கடுமையான நோய்களில் 70.6% குறைவதற்கும் வழி வகுத்தது.
- மாநிலத் திட்ட ஆணையம், இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டின் போது, இது குழந்தைகளில் உணவுப் பழக்கத்தை மேம்படுத்தியது, நேர்மறையான பழக்கங்களை வளர்த்தது, மற்ற குழந்தைகளுடன் சமூகமயமாக்கலை அதிகரித்தது, குழந்தையின் ஆரோக்கியத்தில் காணப்பட்ட முன்னேற்றத்தைக் காட்டியது, பள்ளிக்குச் செல்வதற்கான விருப்பத்தை அதிகரித்தது என்பதைக் கண்டறிந்தது.
- இது படிப்புகளிலும் வகுப்புகளின் ஈடுபாட்டிலும் முன்னேற்றத்தைக் காட்டியது.
- இதில் தரக் கவலைகளை நிவர்த்தி செய்ய, காலை உணவு, மதிய உணவுத் திட்டங்கள் இப்போது இரண்டு மாதிரிகளை ஏற்றுக் கொண்டுள்ளன.
- ஒன்று நகரங்களில் பொதுவான "கிளவுட் கிச்சன்கள்" அங்கு தானியங்கி சமையல் என்பதின் மூலம் சீரான தன்மையை உறுதி செய்கிறது.
- மற்றொன்று கிராமங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் என்பதன் மூலம் அங்கு பெற்றோர்கள் தாங்களாகவே குழந்தைகளுக்காக சமைக்கிறார்கள்.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்க 14 வயதுடைய அனைத்து சிறுமிகளுக்கும் HPV தடுப்பூசி வழங்குவதாக அறிவித்த நாட்டின் முதல் பெரிய மாநிலம் தமிழ்நாடு அரசு ஆகும்.

### அரசியல் பாரம்பரியம்

- உணவு அல்லது பொருட்களை உறுதியளிக்கும் நடைமுறை 1967 ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தல்களில் இருந்து வருகிறது.
- வறுமை மற்றும் பசியை எதிர்த்துப் போராடுவதற்காக அண்ணாதுரை மூன்று படி அரிசியை (3.7 கிலோ) 1 ரூபாய்க்கு வழங்குவதாக உறுதியளித்தார்.
- 1989 மாநிலச் சட்டமன்றத் தேர்தலில், அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் 5 கிலோ அரிசி வழங்குவதாக திமுக உறுதியளித்தது.
- 2006 ஆம் ஆண்டு, அதிமுக குடும்பங்களுக்கு ரூ.2,000 ரொக்க உதவியை வழங்குவதாக கூறிய அதே நேரத்தில் வண்ணத் தொலைக்காட்சிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் விவசாய நிலத்தை திமுக உறுதியளித்தது.
- 2011 தேர்தலில் திமுக மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள், ஒரு கிரைண்டர்

அல்லது மிக்சி மற்றும் ஒவ்வொரு வீட்டிற்கும் 35 கிலோ அரிசி வழங்குவதாக உறுதியளித்த அதே நேரத்தில் அதிமுக 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள், ஒரு மின்விசிறி, ஒரு மிக்சி மற்றும் 20 கிலோ அரிசி வழங்குவதாக உறுதியளித்தது.

- வெற்றி பெற்ற பிறகு, மறைந்த அதிமுக தலைவர் ஜெ. ஜெயலலிதா மடிக்கணினிகள் மற்றும் பிற பொருட்களை வழங்கினார், ஆனால் அவற்றை "அம்மா" தயாரிப்புகள் என்று முத்திரை குத்தினார்.
- 2016 ஆம் ஆண்டில், அதிமுக மேலும் அடுத்தக் கட்டத்திற்கு முன்னேறி, அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் இலவச மொபைல் போன்கள், வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம், ஏழைகளுக்கு பசு மற்றும் ஆடு திட்டம் ஆகியவற்றை உறுதியளித்தது.
- குறிப்பாக, அந்த ஆண்டு திமுக அத்தகைய வாக்குறுதிகளில் இருந்து விலகி இருந்தது.
- மதிய உணவுத் திட்டத்திலும், காலப்போக்கில், திமுக மற்றும் அதிமுக ஆகிய இரண்டும் இந்த உறுதிமொழிகளை விரிவுபடுத்தின.
- மறைந்த திமுக தலைவர் கருணாநிதி 1989 ஆம் ஆண்டில் மதிய உணவில் முட்டைகளையும், 2007 ஆம் ஆண்டில் வாரத்திற்கு மூன்று முட்டைகளையும், 2010 ஆம் ஆண்டில் ஐந்து முட்டைகளையும், சைவ உணவு உண்பவர்களுக்கு வாழைப்பழங்களையும் சேர்த்தார்.
- ஜெயலலிதா பின்னர் "கலவை சாதத்தை" அறிமுகப்படுத்தினார்.





# தேசியச் செய்திகள்

## விரிவான மாதிரிக் கணக்கெடுப்பு 2025

- தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் (NSS) 80வது சுற்றின் கீழான கல்வி குறித்த விரிவான மாதிரிக் கணக்கெடுப்பு (CMS) தற்போது சேர்ந்துள்ள மாணவர்களுக்கான பள்ளிக் கல்விக்கான வீட்டுச் செலவினங்களை ஆய்வு செய்தது.

- மொத்த மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளிகள் 55.9 சதவீதமாகும் என்பதோடு இதில் கிராமப்புறங்களில் 66.0 சதவீதமும் நகர்ப்புறங்களில் 30.1 சதவீதமும் உள்ளன.
- அரசுப் பள்ளி மாணவர்களில் 26.7 சதவீதம் பேர் மட்டுமே பாடக் கட்டணம் செலுத்தினர் என்ற நிலையில் அரசு சாரா பள்ளிகளில் இது 95.7 சதவீதமாக உள்ளது.
- நகர்ப்புறங்களில் உள்ள தனியார் உதவி பெறாத பள்ளிகளில், 98.0 சதவீத மாணவர்கள் பாடக் கட்டணம் செலுத்தியுள்ளனர்.
- அரசுப் பள்ளிகளில் ஒரு மாணவருக்கு வீட்டுச் செலவு 2,863 ரூபாயாகவும், அரசு சாரா பள்ளிகளில் 25,002 ரூபாயாகவும் இருந்தது.
- சராசரியாக ஒரு மாணவருக்கு 7,111 ரூபாயாக உள்ள பாடக் கட்டணம் ஆனது குடும்பங்களுக்கு அதிகபட்ச செலவாக உள்ளது என்பதோடு அதைத் தொடர்ந்து பாடப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களுக்கு ஆகும் செலவினம் 2,002 ரூபாயாகவும் இருந்தது.
- நகர்ப்புற மாணவர்கள் பாடக் கட்டணமாக சராசரியாக 15,143 ரூபாய் செலவிட்டனர், அதே நேரத்தில் கிராமப்புற மாணவர்கள் 3,979 ரூபாய் செலவிட்டனர்.
- நகர்ப்புறங்களில் 30.7 சதவீதமும் கிராமப்புறங்களில் 25.5 சதவீதமும் என சுமார் 27.0 சதவீத மாணவர்கள் தனியார் பயிற்சியை மேற்கொண்டனர்.
- பயிற்சிக்கு ஆகும் சராசரி குடும்பச் செலவு நகர்ப்புறங்களில் 3,988 ரூபாயாகவும், கிராமப்புறங்களில் 1,793 ரூபாயாகவும் இருந்தது.
- உயர்நிலைப் பள்ளியில், பயிற்சிச் செலவுகள் நகர்ப்புறங்களில் 9,950 ரூபாயாகவும், கிராமப்புறங்களில் 4,548 ரூபாயாகவும் இருந்தன.
- இந்தியா முழுவதும் உள்ள 95.0 சதவீத மாணவர்களுக்கு கல்வி நிதியின் முக்கிய ஆதாரமாக குடும்ப உறுப்பினர்கள் இருந்தனர்.
- 1.2 சதவீத மாணவர்கள் மட்டுமே அரசாங்க உதவித் தொகையை தங்கள் முதன்மை நிதி ஆதாரமாகச் சார்ந்துள்ளதாக கூறினர்.




## ஆரோஹன் திட்டம்

- சுங்கச் சாவடி ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி ஆர்வங்களை ஆதரிப்பதற்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆரோஹன் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டமானது புது டெல்லியில் உள்ள வெர்டிஸ் உள்கட்டமைப்பு அறக்

கட்டளையுடன் இணைந்து தொடங்கப்பட்டது.


- ஆரோஹன் திட்டமானது, நிதி சார் தடைகளை நீக்கி, நலிவடைந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தரமான கல்விக்கான சமமான அணுகலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெண்கள், முதல் தலைமுறை கற்பவர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர், இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆதரவளிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் ஆனது, SMEC அறக்கட்டளையின் முன்னெடுப்பான பாரத் கேர்ஸ் அறக்கட்டளையினால் செயல்படுத்தப்படும்.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அமல்படுத்தப் படும் முதல் கட்டத்திற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 11 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை 500 மாணவர்களுக்கு ஆண்டிற்கு 12,000 ரூபாய் உதவித்தொகை வழங்கும்.
- இது உயர்கல்வியைத் தொடரும் 50 மாணவர்களுக்கு தலா 50,000 ரூபாய் உதவித் தொகையுடன் ஆதரவளிக்கும்.




## பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் குற்றச்சாட்டுகள்

- ஒரு பகுப்பாய்வு, 31% பாராளுமன்ற உறுப்பினர்கள் (MP) மற்றும் 29% சட்டமன்ற உறுப்பினர்கள் (MLA) மீது கடுமையான குற்றவியல் குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் காட்டுகிறது.
- ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் அல்லது பிணையில் வெளிவர முடியாத குற்றங்கள் உள்ளிட்ட கடுமையான குற்ற வழக்குகள் உள்ளன.
- இத்தகையக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் மக்களவைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் விகிதம் 2009 ஆம் ஆண்டில் 14% ஆக இருந்தது என்பதோடு இது 2024 ஆம் ஆண்டில் 31% ஆக இரட்டிப்பாகியுள்ளது.
- தெலுங்கானாவில் 71% அளவிலான தீவிர குற்றச்சாட்டுகளுடன் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிக சதவீதத்தில் உள்ளனர் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பீகார் 48% பங்கினைக் கொண்டுள்ளது.

- கட்சிகளில், பாஜகவில் 63 பாராளுமன்ற உறுப்பினர்கள் (26%) கடுமையான வழக்குகளை எதிர்கொள்கின்றனர் என்கிற அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியில் 32 பாராளுமன்ற உறுப்பினர்கள் (32%) கடுமையான / தீவிர வழக்குகளை எதிர் கொள்கின்றனர்.
- சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 56% உறுப்பினர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளையும் உத்தரப் பிரதேசத்தில் 154 சட்டமன்ற உறுப்பினர்கள் (38%) கடுமையான வழக்குகளையும் எதிர்கொள்கின்றனர்.
- தெலுங்கு தேசம் கட்சி (TDP) மற்றும் இராஷ்ட்ரிய ஜனதா தளம் (RJD) ஆகிய கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் கடுமையான வழக்குகளை எதிர்கொள்கின்றனர்.




## குஜராத்தில் மின்சார வாகன உற்பத்தி முன்னெடுப்புகள்





- குஜராத்தின் ஹன்சல்பூரில் பிரதமர் பசுமைப் போக்குவரத்து இயக்க முன்னெடுப்புகளைத் தொடங்கி வைத்தார் என்பதோடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட e-Vitara எனும் சுசுகியின் முதல் உலகளாவிய மூலோபாய மின்கலத்தில் இயங்கும் மின்சார வாகனத்தினையும் அவர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- மூன்று ஜப்பானிய நிறுவனங்கள் இணைந்து இந்தியாவில் முதல் முறையாக TDS (தோஷிபா-டென்சோ-சுசுகி) லித்தியம்-அயனி மின்கல ஆலையில் மின் கலங்களை உற்பத்தி செய்ய உள்ளன.

- மாருதி சுசுகி நிறுவனமானது, பிரதான் மந்திரி E-Drive திட்டத்தின் கீழ் ஒரு கலப்பின ஆம்புலன்ஸ் முன்மாதிரியை உருவாக்கியது.

## தேசியத் தலைவர்களை கௌரவிப்பதற்கான குழுக்கள்

- சர்தார் வல்லபாய் படேல் மற்றும் பிர்சா முண்டா ஆகியோரின் 150வது பிறந்த நாளையும், அடல் பிஹாரி வாஜ்பாயின் 100வது பிறந்தநாளையும் குறிக்கும் வகையில் மத்திய அரசு மூன்று உயர்மட்டக் குழுக்களை அமைத்துள்ளது.
- தனித்தனி அரசு இதழ் வெளியீடுகளில் அறிவிக்கப்பட்டுள்ள படி, பிரதமர் மூன்று குழுக்களுக்கும் தலைமை தாங்குவார்.
- கலாச்சார அமைச்சகம் ஆனது சர்தார் படேலின் குழுவிற்கான அரசிதழ் அறிவிப்பை 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று வெளியிட்டது.
- 1875 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று பிறந்த சர்தார் வல்லபாய் படேல், இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும், 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்றும் நினைவு கூறப் படுகிறார்.
- பிர்சா முண்டாவின் 150வது பிறந்த நாளுக்கான குழு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.
- பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய பழங்குடியினத் தலைவராகவும் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரராகவும் பிர்சா முண்டா கௌரவிக்கப் படுகிறார்.
- வாஜ்பாயின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் குழுவிற்கான தனி அறிவிப்பு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதி வெளியிடப்பட்டது.
- அடல் பிஹாரி வாஜ்பாய் 1999 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான முழு பதவிக்காலம் உட்பட மூன்று முறை பிரதமராகப் பணியாற்றினார்.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## UPM J1040−3551 AabBab

- அறிவியலாளர்கள் UPM J1040−3551 AabBab எனப்படும் அரிய நான்கு நட்சத்திர

அமைப்பைக் கண்டறிந்துள்ளனர்.

- இந்த அமைப்பில் இரண்டு புதிய செந்நிற குள்ள நட்சத்திரங்களைச் சுற்றி வரும் இரண்டு குளிர்ந்த பழுப்பு நிற குள்ள நட்சத்திரங்கள் உள்ளன என்பதோடு இது ஒரு தனித்துவமான உள்ளமைவு ஆகும்.
- பழுப்பு நிறக் குள்ள நட்சத்திரங்கள் "முழுமையடையாத நட்சத்திரங்கள்" ஆகும் என்ற நிலையில் அவை நட்சத்திரங்களைப் போல உருவானாலும், ஹைட்ரஜனை இணைத்துப் பிரகாசமாக ஒளிரத் தேவையான நிறை அதில் இல்லை.
- அவை குளிர்ந்ததாகவும் மங்கியதாகவும் இருப்பதால் அவற்றைக் கண்டறிவது கடினம், எனவே அவை பெரும்பாலும் பிரகாசமான துணை நட்சத்திரங்களுக்கு அருகில் காணப்படுகின்றன.
- இரண்டு T-வகை பழுப்பு நிறக் குள்ள நட்சத்திரங்கள் ஓர் இணை நட்சத்திரங்களைச் சுற்றி வரும் முதல் நான்கு அமைப்பு நட்சத்திரம் இது என்பதால் இந்தக் கண்டுபிடிப்பு குறிப்பிடத்தக்கது ஆகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பாரிசு உடன்படிக்கையின் கீழ் கார்பன் சந்தைகள்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது, பாரிசு உடன்படிக்கையின் 6வது பிரிவினைச் செயல்படுத்துவதற்கு தேசிய அளவில் நிர்ணயிக்கப் பட்ட ஆணையத்தினை (NDA) இறுதி செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதி அறிவிக்கப்பட்டபடி, NDA என்பது சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளர் தலைமையிலான 21 உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகும்.
- இதன் உறுப்பினர்களில் வெளியுறவு அமைச்சகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எஃகு அமைச்சகம், நிதி ஆயோக் ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்குவர் என்பதோடு மேலும் இதில் சுற்றுச்சூழல் அமைச்சகம் அதிகபட்ச பிரதிநிதித்துவம் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் பாகுவில் நடைபெற்ற COP29 மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 6வது பிரிவு, பாரிசு உடன்படிக்கையின் கீழ் உலகளாவிய கார்பன் சந்தைகளுக்கான விதிகளை வரையறுக்கிறது.
- உமிழ்வு குறைப்புத் திட்டங்களை அங்கீகரிப்பது, கார்பன் வர்த்தகத்திற்கான தகுதியான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பது மற்றும் தேசியப் பருவநிலை

இலக்குகளை நோக்கி உமிழ்வு அலகுகளைப் பயன்படுத்துவதை அங்கீகரிப்பது ஆகியவற்றுக்கானப் பொறுப்பினை NDA கொண்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்படும் கார்பன் வரவுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதே கார்பன் சந்தை நெறிமுறையின் நோக்கமாகும்.
- இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDC) ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உமிழ்வு தீவிரத்தை 2005 ஆம் ஆண்டின் நிலைகளிலிருந்து 45 சதவீதம் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதைபடிவம் சாரா எரிபொருட்களிலிருந்து 50 சதவீத மின் உற்பத்தித் திறனையும், 2030 ஆம் ஆண்டிற்குள் காடு வளர்ப்பு மூலம் 2.5 முதல் 3 பில்லியன் டன் அளவிலான கார்பன் உறிஞ்சு பகுதியை உருவாக்குவதையும் இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.




## SDG குறித்த தன்னார்வ தேசிய மதிப்பாய்வு

- ஐக்கிய நாடுகளின் உயர் மட்ட அரசியல் மன்றத்தில் (HLPF) நிலையான மேம்பாட்டு இலக்குகள் குறித்த (SDG) தனது மூன்றாவது தன்னார்வத் தேசிய மதிப்பாய்வு (VNR) அறிக்கையை இந்தியா சமர்ப்பித்தது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதற்கான முன்னேற்றத்தை உலக நாடுகள் மதிப்பிடவும் அது குறித்த அறிக்கையினை முன்வைக்கவும் VNR செயல்முறை அனுமதிக்கிறது.
- இந்தியாவின் 2025 ஆம் ஆண்டு அறிக்கை, 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப் பட்ட அதன் முந்தைய அறிக்கைகளைப் பின்பற்றுகிறது.
- நிதி ஆயோக் அமைப்பானது, அனைத்து நிலை நிர்வாகத்தையும், குடிமைச் சமூகத்தையும் உள்ளடக்கிய முழு அரசு மற்றும் முழு சமூக அணுகுமுறையின் மூலம் VNR தயாரிப்பை வழிநடத்தியது.
- SDG உள்ளூர்மயமாக்கல் மாதிரியானது மாவட்டங்கள், தொகுதிகள் மற்றும் கிராமங்களிலிருந்து அதிகப்படியான/தீவிரப் பங்கேற்பை உள்ளடக்கியது.
- 2011–12 ஆம் ஆண்டில் 16.2% ஆக இருந்த தீவிர வறுமை நிலையானது, 2022–23 ஆம் ஆண்டில் 2.3% ஆக குறைக்கப்பட்டது என்பதோடு இது 171 மில்லியன் மக்களின் நிலையை உயர்த்தியது.
- 2004–05 ஆம் ஆண்டில் 204.6 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி 2023–24 ஆம் ஆண்டில் 332.3 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.

- ❖ உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் தற்போது பெண்கள் 45 சதவீதத்திற்கும் அதிகமாக பங்கு பெற்றுள்ளனர்.
- ❖ 2005-06 ஆம் ஆண்டில் 47% ஆக இருந்த 20 முதல் 24 வயதுடைய பெண்களிடையே குழந்தை திருமண விகிதம், 2019-21 ஆம் ஆண்டில் 23.3% ஆகக் குறைந்துள்ளது.
- ❖ ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஆனது கிராமப்புற வீடுகளில் 2019 ஆம் ஆண்டில் 17% ஆக இருந்த குடிநீர்க் குழாய் அணுகலை 80 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்த்தியது.
- ❖ புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்கள் தற்போது இந்தியாவின் நிறுவப்பட்ட மின்சார உற்பத்தி திறனில் 47.37% பங்கினைக் கொண்டுள்ளன.
- ❖ உலகளாவியப் புத்தாக்கக் குறியீட்டில் (GII) 2020 ஆம் ஆண்டில் 48வது இடத்திலிருந்த இந்தியாவின் தரவரிசை 2024 ஆம் ஆண்டில் 39வது இடத்திற்கு முன்னேறியது.
- ❖ 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரலை எட்டுவதற்கும், 2047 ஆம் ஆண்டிற்குள் விக்சித் பாரத் (வளர்ச்சியடைந்த இந்தியா) நிலையை அடைவதற்குமான இந்தியாவின் உள்ளடக்கிய, புதுமையான மற்றும் தரவு சார்ந்தப் பயணத்தை VNR 2025 பிரதிபலிக்கிறது.




## முக்கிய தினங்கள்

### உலக நீர் வாரம் 2025 - ஆகஸ்ட் 24 முதல் 28 ஆம் தேதி வரை

- ❖ இது 1991 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்ற, உலகளாவிய நீர்ப் பிரச்சினைகள் குறித்து முன் வைக்கும் முன்னணி மாநாடு ஆகும்.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, Water for Climate Action என்பதாகும்.
- ❖ 4 பேரில் 1 நபர் அல்லது உலகளவில் 2.1 பில்லியன் மக்கள் இன்றளவும் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் குடிநீருக்கான அணுகலைப் பெறவில்லை.
- ❖ 106 மில்லியன் மக்கள் சுத்திகரிக்கப்படாத மேற்பரப்பு நீர் மூலங்களிலிருந்து நேரடியாக குடிநீரைப் பெறுகின்றனர்.
- ❖ 1.7 பில்லியன் மக்கள் இன்னும் தங்கள் வீடுகளில் அடிப்படை சுகாதார சேவைகளைக் கொண்டிராமல் உள்ளனர் என்பதோடு இதில் 611 மில்லியன் பேர் எந்த வசதிகளையும்

அணுகாமல் உள்ளனர்.




### சிறு தொழில் தினம் 2025 - ஆகஸ்ட் 30

- இத்தினம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் புதுமைக்கு சிறு தொழில்களின் மகத்தான பங்களிப்பைக் கொண்டாடுகிறது.
- 2000 ஆம் ஆண்டு இந்த நாளில், சிறு தொழில்கள் அமைச்சகம் (SSI) ஆனது SSI துறைக்கான ஒரு விரிவான கொள்கை தொகுப்பை அறிமுகப்படுத்தியது.
- இந்திய MSME நிறுவனங்கள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30.1% என்ற அளவிற்குப் பங்களிக்கின்றன மற்றும் 2024 ஆம் ஆண்டு அகில இந்திய ஏற்றுமதியில் சுமார் 45.79% என்ற அளவிற்குப் பங்கைக் கொண்டுள்ளன.
- இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது ஆண்டுதோறும் ஜூன் 27 ஆம் தேதியன்று சர்வதேச MSME நிறுவனங்கள் தினத்தை அனுசரிப்பதாக அறிவித்தது.





## இதரச் செய்திகள்

### அபுதாபியில் கிறிஸ்துவக் குடியேற்றம்

- அபுதாபிக்கு அருகிலுள்ள சர் பானி யாஸ் தீவில் 1,400 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் ஒரு சுண்ணச்சாந்தினால் செய்யப்பட சிலுவையைத் தொல்பொருள்

ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

- 1992 ஆம் ஆண்டு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட வீடுகளின் முற்றத்தில் இந்த சிலுவை கண்டுபிடிக்கப்பட்டது என்பதோடு இது அருகிலுள்ள தேவாலயம் மற்றும் மடாலயத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, வீடுகள் ஒரு கிறிஸ்துவக் குடியேற்றத்தின் ஒரு பகுதியாக இருந்தன என்பதற்கான உறுதியான ஆதாரங்களை வழங்குகிறது.
- மூத்தத் துறவிகள் பிரதான மடாலயத்திலிருந்து விலகி பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதத்திற்காக இந்த சிறிய வீடுகளில் வசித்து வந்ததாக நிபுணர்கள் நம்புகின்றனர்.
- ஆறாம் நூற்றாண்டில் இப்பகுதியில் கிறிஸ்துவச் சமூகங்கள் செழித்து வளர்ந்தன என்ற நிலையில் எட்டாம் நூற்றாண்டில் மடாலயம் கைவிடப் படுவதற்கு முன்பு முஸ்லிம்களுடன் அவர்கள் இணைந்து வாழ்ந்தனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★